இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 07 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 01 – ஞாயிற்றுக்கிழமை 17 ஆகஸ்ட் 2025 – வெளியூர் 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 07 : Thiruvalluvar Year - 2056 - Aavani 01 - Sunday 17 August 2025 - Dak 28 Pages ₹ 5.00

## அமெரிக்காவில் இறக்குமதி வரி அதிகரிப்பு : கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள

# தமிழ்நாட்டின் வர்த்தகத்தை மீட்க நடவடிக்கை தேவை!

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஆக.17 -**

**இந்தியப் பொருட்களின் மீதான இறக்குமதி வரியினை அமெரிக்கா உயர்த்தியுள்ள நிலையில், தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வர்த்தகத்தை மீட்டெடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களுக்கு நேற்று (16.8.2025) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில், இரு நாடுகளுக்கும் பயனளிக்கக் கூடிய வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதற்கு ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டுவதாகவும், தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கான ஒன்றிய அரசின் நிலைப்பாட்டை முழுமையாக ஆதரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தற்போதைய 25% வரி மற்றும் அதன் தொடர்ச்சியாக 50% வரி அதிகரிப்பு காரணமாக கடுமையான தாக்கங்களை எதிர்கொள்வதால், தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கும் கவலை அளிக்கும் ஒரு பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதாக தெரிவித்துள்ளார்.

**தமிழ்நாட்டில் தாக்கம் அதிகமாக இருக்கும்!**

கடந்த நிதியாண்டில், இந்தியாவின் மொத்த பொருட்கள் ஏற்றுமதியான $433.6 பில்லியன் மதிப்பிலான பொருட்களில் 20 விழுக்காடு அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும் நிலையில், தமிழ்நாட்டின் $ 52.1 பில்லியன் பொருட்களில் 31 விழுக்காடு அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார். இவ்வாறு அமெரிக்க சந்தையை தமிழ்நாடு அதிகமாகச் சார்ந்திருப்பதால், இறக்குமதி வரியின் தாக்கம், இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கும் என்றும், இந்த வரிவிதிப்பு தமிழ்நாட்டின் உற்பத்தித் துறை மற்றும் வேலைவாய்ப்பில் குறிப்பிடத்தக்க பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரிவிதிப்பினால் ஜவுளி, ஆடைகள், இயந்திரங்கள், ஆட்டோ மொபைல்ஸ், ரத்தினக் கற்கள் மற்றும் நகைகள், தோல், காலணிகள், கடல் பொருட்கள் மற்றும் இரசாயனங்கள் துறைகளில் மிகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இந்தத் துறைகள் அனைத்தும் அதிகத் தொழிலாளர்களை சார்ந்தவை என்பது இன்னும் கவலைக்குரியது என்றும், இதில் எந்தவொரு ஏற்றுமதி மந்தநிலையும் விரைவாக பெருமளவிலான பணி இழப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் தனது கடிதத்தில் கவலைபடத் தெரிவித்துள்ளார். 2024-2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு 28% பங்களித்தது என்றும், இது இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களைக் காட்டிலும் மிகவும் அதிகம் என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

**30 இலட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம்!**

குறிப்பாக, தமிழ்நாட்டில் ஜவுளித் துறை கிட்டத்தட்ட 75 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 25% வரி மற்றும் முன்மொழியப்பட்டுள்ள 50% வரியின் காரணமாக, 30 இலட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம் உள்ளதாகவும், இந்த நெருக்கடியைத் தணிக்க, நமது ஏற்றுமதி போட்டித்தன்மைக்கு நீண்டகாலமாகத் தடையாக இருக்கும் கட்டமைப்பு சிக்கல்களைத் தீர்ப்பது அவசியம் என்று தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இது தொடர்பாக, பாதிக்கப்பட்ட துறைகளைச் சேர்ந்த தொழில் அமைப்புகளுடன் தான் விரிவான ஆலோசனைகளை நடத்தியதாகவும், இந்த ஆலோசனைகளின் அடிப்படையில், ஜவுளித் துறைக்கு இரண்டு அம்சங்களில், அதாவது, மனிதனால் உருவாக்கப்பட்ட இழை மதிப்புச் சங்கிலிக்கான ஜி.எஸ்.டி. விகிதங்களில் உள்ள முரண்பாடுகளை நீக்கி, தலைகீழ் வரி கட்டமைப்பை சரிசெய்தல், முழு சங்கிலியையும் 5% ஜி.எஸ்.டி. அடுக்குக்குள் கொண்டுவருதல் மற்றும் அனைத்து வகையான பருத்திக்கும்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (16.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், ஒரத்தநாடு மற்றும் நெய்வேலி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்துப் பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்குப் புத்தகத்தையும் வழங்கினார்.

### "உடன்பிறப்பே வா"

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - கழக நிர்வாகிகளுடன் ஆலோசனை!

சென்னை, ஆக. 17 -

"உடன்பிறப்பே வா" எனும் தலைப்பில், தி.மு.க. நிர்வாகிகளுடன், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரடியாக ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் 'உடன்பிறப்பே வா' எனும் தலைப்பில் தொகுதி வாரியாக தி.மு.க. நிர்வாகிகளை, தனித்தனியாக சந்தித்து ஆலோசனை மேற்கொண்டு வருகிறார். இந்த சந்திப்பின் போது, கட்சியின் ஆக்கப்பணிகள், தேர்தல் செயல் திட்டங்கள் குறித்து திமுக நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்.

இந்நிலையில், மூன்று தொகுதிகளைச் சேர்ந்த கட்சியின் நிர்வாகிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று ஆலோசனை மேற்கொண்டார். சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் இந்த கலந்துரையாடலில், மூன்று தொகுதிகளை சேர்ந்த ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் பங்கேற்றனர்.

அப்போது "ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பில் பூத் அளவிலான உறுப்பினர் சேர்க்கை குறித்தும், ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் குறித்த விவரங்களையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார்.

## முரசொலி மாறன் 92வது பிறந்தநாள் : இன்று

## முதல்வர் - தலைவர் தருமபுரியில் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கிறார்!

### முரசொலி வளாகத்தில் உள்ள சிலைக்கு – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மரியாதை!

**சென்னை, ஆக. 17-**

**தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள், ஏற்கனவே திட்டமிட்டபடி தருமபுரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவிருப்பதால்;**

**முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியாக விளங்கியவரும் - திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூளையாகச் செயல்பட்டவரும் - ஒன்றிய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றியவருமாகிய முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்த நாளினை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள், இன்று (ஆகஸ்ட் 17) தருமபுரியில் முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.**



**அதேநேரத்தில் இன்று (17.8.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில் கோடம்பாக்கம், 'முரசொலி' அலுவலகத்தில் அமைந்துள்ள முரசொலி மாறன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மலர் மாலை அணிவித்து, திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.**

**அதுபோது ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

**- சென்னை மாவட்ட தி.மு.க.**

### பா.ஜ.க.வின் வாக்குத் திருட்டைக் கண்டித்து

## பீகாரில் 16 நாட்கள் நடைபயணம்!

### ராகுல் காந்தி இன்று தொடங்குகிறார்!

பாட்னா, ஆக. 17 -

பா.ஜ.க.வின் வாக்குத் திருட்டு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் பீகாரில் 16 நாட்களில் ஆயிரத்து 300 கிலோ மீட்டர் நடைபயணத்தை ராகுல் காந்தி இன்று தொடங்குகிறார்.

பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் மூலம் 65 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலையும், அதற்கான காரணத்தையும் தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும் என உத்தரவிட்டது.

இதனிடையே, தேர்தல் ஆணையம் பாஜகவுடன் இணைந்து சட்டமன்றம் மற்றும் மக்களவை தேர்தலில் வாக்கு திருட்டில் ஈடுபட்டதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டினார். ஆதாரங்களுடன் அவர் வெளியிட்டுள்ள இக்குற்றச்சாட்டு நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதனைக் கண்டித்து கடந்த திங்கள்கிழமை, நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து தேர்தல் ஆணையம் நோக்கி பேரணி நடத்திய ராகுல் காந்தி உள்ளிட்ட 250 எம்.பி.க்கள் பாதி வழியில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.



இந்நிலையில் வாக்குத் திருட்டு தொடர்பாக மக்களிடையே, விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இன்று முதல் 16 நாட்களுக்கு பீகாரில் ராகுல் காந்தி நடைபயணம் மேற்கொள்ள உள்ளார்.

சுமார் ஆயிரத்து 300 கிலோ மீட்டர் தூரம் கொண்ட இந்த நடை பயணம், ரோத்தாஸ் மாவட்டத்தில் உள்ள சசாராம் எனும் பகுதியில் இன்று தொடங்கி, செப்டம்பர் ஒன்றாம் தேதி பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் நிறைவடையும் என காங்கிரஸ் அறிவித்துள்ளது. இந்த நடைபயணத்தில் இந்தியா கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராகுல் காந்தியின் நடைபயணத்தில் "இந்தியா" கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்க உள்ளனர்.